சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No. 22/13

வாதி / பிரதிவாதி வாசா.1 வது சாட்சி உதவியாளர் திரு.சுப்பிரமணியன் அவர்களால் 44/1969 பிரிவின்படி 24.06.2019 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

பெயர் :பெத்தாயி

த/பெ : சந்தானம்

4ம் பிரதிவாதி தரப்பில் கு.வி.

என் தந்தை பேரானுக்கு ராமசாமி, ராமலிங்கம் என்ற இரண்டு மகன்களும், பெத்தாயி, பொன்னம்மாள் என்ற இரண்டு மகள்கள் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி 40 வருடம் இருக்கும். பொன்னம்மாளுக்கு திருமணம் ஆகிய 50 வருடம் இருக்கும். என் தந்தை பேரான் இறந்து 40 வருடம் இருக்கும். என் தந்தை இறக்கும்போது எனக்கு வயது சுமார் 10 வயது இருக்கும். வழக்கு சொத்து என் தந்தை பேரான் பெயரில் உள்ளது என்பதற்கு எந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆவணம் கொடுத்துள்ளேன். வழக்கு சொத்தில் என் தந்தைக்கு 5ல் ஒரு பாகம் உரிமையுள்ளது என்றும் பொய்யானது என்றால் சரியல்ல. நானும், என் சகோதரன், சகோதரியும் திருமணம் ஆகி தனித்தனியாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனக்கு திருமணம் யார் செய்து வைத்தார் என்றால் நானாகத்தான் செய்துக்கொண்டேன். என்னையும் எனது எனது சகோதரியையும் நல்ல சீர்வரிசை செய்து ராமசாமி செய்து வைத்தார் என்றால் சரியல்ல. என் அம்மா தான் திருமணம் செய்து வைத்தார். இதுவரை ராமசாமி எதுவும் செய்யவில்லை. நான் எனது பிராதில் கூட்டுக்குடும்ப சொத்தில் இதுவரை வருமானம் கொடுத்துக்கொண்டிருப்பதாக நான் கூறவில்லை. நான் தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சொத்தில 5ல் 1 பாகம் இல்லை என்றால் சரியல்ல. அதேபோல் 11ம் பிரதிவாதிக்கும் பாகம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பொன்னம்மாவை வாரிசுகளை இந்த வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சேர்த்திருக்கிறோம். பொன்னம்மாளும், நானும் தான் சேர்ந்து வழக்கு போட்டுள்ளோம். என் தகப்பனார் இறந்ததில் வழக்கு சொத்தில் எனக்கு 20ல் 5 பாகம் தவறானது என்றம் அவ்வாறு எந்த பாகம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் சில சொத்துகக்களை ராமசாமி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். ராமசாமி கிரையம் வாங்கிய சொத்துக்களை எது என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து விபரம் பட்டியல் 3,4,5 , 7, 14, 19, 20 ஆகிய சொத்துக்கள் ராமசாமியின் சுயசம்பாத்திய சொத்துக்கள் என்றால் சரியல்ல. என் அப்பா சம்பாதித்தது. என் அபபா அம்மா சம்பாத்திய வாங்கிய சொத்துக்கள் எந்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் கொடுத்துள்ளேன்.அதேபோல் 4,5 பிரதிவாதியின் தயாரால் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. மேற்படி 4,5 பிரதிவாதிகளின் தாயாரால் 1ம் பிரதிவாதியின் பாரதியால் அவரது பெற்றோருக்கு கொடுக்கப்பட்ட பணத்தைக்கொண்டு வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

வருவாய் துறை ஆவணங்களில் ராமசாமி ராமலிங்கம் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் அவர்கள் சுயமாக சம்பாதித்தால் அவர்கள் பெயரில் உள்ளது என்றும், அவர்கள் தான் அனுபவித்தார் என்றால் சரியல்ல. அதனால் தான் வருவாய் துறையில் எனது பெயரை சேர்க்க இதுவரை எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் 1989 க்கு முன்பு திருமணம் ஆனதால் கூட்டு சொத்துக்களில் எந்தவித கோரமுடியாது என்றால் சரியல்ல. அதேபோல் என் அப்பா 2005 க்கு முன்பு இறந்தால் எனக்கு எந்த பாகமும் இல்மல என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு எந்த சட்டமுகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அவசியமான தரப்பினரை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

(ஒம்) பெத்தாயி
(ஒம்) C.ஸ்ரீதர்
சார்பு நீதிபதி,
குளித்தலை.